சுற்றுநிருபம் : **04/2012**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வட மாகாணம்
2012.08.10

வட மாகாணத்திலுள்ள சகல
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

## கல்வித்தகைமை மீளாய்வு
## பொதுமுகாமையாளர் பதவி (101/05-101/11)

வடமாகாணத்திலுள்ள பல கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர் பதவி நிரப்பப்படாது வெற்றிடமாக காணப்படுவதை ஆணைக்குழு கவனத்தில் எடுத்துக் கொண்டது. பொருத்தமான கல்வித்தகைமைகள் இருந்தும் வேண்டப்பட்ட சேவைத்கைமை உயர்வாகக் காணப்பட்டமையால் ஏற்கனவே சேவையில் உள்ளவர்களை சங்கங்கள் உயர் முகாமைப்பதவிக்கு உள்வாங்க முடியாதநிலை காணப்படுகின்றது. கூட்டுறவுச் சங்கங்களில் கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த பல பணியாளர்கள் வேண்டப்பட்ட முகாமைமட்ட அனுபவத்தகைமைகள் உயர்வாகக் குறிப்பிடப்பட்டமையால் அத்தகைய பணியாளர்களை உயர் முகாமைப்பதவிகளுக்கு உள்வாங்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இதனை ஆராய்ந்த ஆணைக்குழு பொது முகாமையாளர் பதவிக்கான கீழ்க்குறிப்பிடப்படும் தரங்களில் வேண்டப்பட்ட தகைமையில் “இ” பிரிவில் கீழ்க்குறிப்பிட்டவாறு மாற்றங்கள் மேற்கொண்டுள்ளது. இம்மாற்றங்கள் 2012.09.01 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் ஆணைக்குழு தீர்மானிக்கின்றது.

**101-05** பொது முகாமையாளர்

(அ) கூட்டுறவு ஊழியர் 6 வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 7 வது சம்பளத்திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 10 ஆண்டு கால அனுபவம். இதில் உயர்தரமுகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்தித்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 08 வருட கால அனுபவம் இதில் சிரேஷ்ட முகாமைமட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 வருட கால அனுபவம் கட்டாயமாகும்/ க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 12 வருட சேவையாற்றிய அனுபவம். இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

| | | | |
|---|---|---|---|
| **101-06** | பொது முகாமையாளர் | (அ) | கூட்டுறவு ஊழியர் 7 வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 8 வது சம்பளத்திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம் |

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 08 ஆண்டு கால அனுபவம். இதில் உயர்தரமுகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்தித்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 06 வருட கால அனுபவம் இதில் சிரேஷ்ட முகாமைமட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 02 வருட கால அனுபவம் கட்டாயமாகும்/ க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 10 வருட சேவையாற்றிய அனுபவம். இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்

குறைந்தது 02 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

| | | | |
|---|---|---|---|
| 101-07 | பொது முகாமையாளர் | (அ) | கூட்டுறவு ஊழியர் 8 வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 9 வது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம் |
| | | | அல்லது |
| | | (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம். |
| | | | அல்லது |
| | | (இ) | கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்தித்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 05 வருட கால அனுபவம்/ க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 08 வருட சேவையாற்றிய அனுபவம். |
| 101-08 | பொது முகாமையாளர் | (அ) | கூட்டுறவு ஊழியர் 9 வது சம்பளத்திட்ட முகாமை /மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 10 வது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம் |
| | | | அல்லது |
| | | (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் |

அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்தித்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 வருட கால அனுபவம்/ க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 6 வருட சேவையாற்றிய அனுபவம்.

**101-09** பொது முகாமையாளர் (அ) கூட்டுறவு ஊழியர் 10 வது சம்பளத்திட்ட முகாமை /மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 11 வது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்தித்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 வருட கால அனுபவம்/ க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 4 வருட சேவையாற்றிய அனுபவம்.

| | | | |
|---|---|---|---|
| **101-10** | **பொது முகாமையாளர்** | (அ) | கூட்டுறவு ஊழியர் 11 வது சம்பளத் திட்டத்தில் முகாமை /மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 12 வது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் ஆகக் குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம் |
| | | | அல்லது |
| | | (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 01 வருட அனுபவம். |
| | | | அல்லது |
| | | (இ) | கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்தித்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 02 வருட கால அனுபவம்/ க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 2 வருட சேவையாற்றிய அனுபவம். |
| **101-11** | **பொது முகாமையாளர்** | (அ) | கூட்டுறவு ஊழியர் 12 வது சம்பளத் திட்டத்தில் முகாமை /மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 13 வது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் ஆகக் குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம் |
| | | | அல்லது |
| | | (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் அல்லது அதற்கு சமனான தகைமை. |
| | | | அல்லது |

(இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்தித்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 01 வருட கால அனுபவம்/ க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 1 வருட சேவையாற்றிய அனுபவம்.

2012.08.09ந் திகதிய ஆணைக்குழு ஆணைப்படி,

க.பிரபா

செயலாளர்

Ms.K.PRABHA
Secretary
Co-operative Employees Commission
No.

பிரதி:

1. கௌரவ ஆளுநரின் செயலாளர், வடமாகாணம்.
2. செயலாளர், கூட்டுறவு ஊழியா ஆணைக்குழு கொழும்பு.
3. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், வடமாகாணம்.
4. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி/ வவுனியா/ முல்லைத்தீவு/ மன்னார்.